ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2478/17 - 2026 මාර්තු මස 04 වැනි බදාදා - 2026.03.04

*2478/17 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வட மாகாண மாகாண சபை

### வடமாகாண கௌரவ ஆளுநரின் அறிவித்தல்

1. 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 184 ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படும் விசாரணை

2. வடமாகாணத்தின் ஆளுநரான நாகலிங்கம் வேதநாயகன் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்) 184 ஆவது பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் நகர சபைகள் கட்டளைச் சட்டம் (255 ஆம் அத்தியாயம்) 184 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கு அமைவாக கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள்/ குற்றச்சாட்டுகள் தொடர்பாக மன்னார் நகர சபையின் செயற்பாடுகளை ஆராய்ந்து, பரிசோதித்து, விசாரணை செய்து மூன்று மாதத்துக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 184 ஆம் பிரிவின் (1A) ஆம் உப பிரிவிற்கமைவாக தனிநபர் விசாரணை சபை ஒன்றிற்காக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிமன்ற நீதிவான் திரு. கந்தையா அரியநாயகம் அவர்களை நியமித்துள்ளேன்.

1A - PG 7557 — 04 (2026/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. விசாரணை செய்யப்பட வேண்டிய விடயங்கள் / குற்றச்சாட்டுகள்.

I. வடமாகாண உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரால் ஆக்கப்பட்டு வட மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட சபை அலுவல்களை கொண்டு நடாத்துதல் தொடர்பாக நியமனத்துணை விதிகள் மன்னார் நகர சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இந்நிலையில் பின்வரும் திகதிகளில் நடைபெற்ற சபைக்கூட்ட அலுவல்கள் கொண்டு நடாத்துதல் தொடர்பான நியமத்துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டுள்ளமை.

மன்னார் நகர சபையின் 09.07.2025 ஆந் திகதி நடைபெற்ற 02 ஆவது பொதுக்கூட்டம்

i. மன்னார் நகர சபையின் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை16 ஆகவுள்ள நிலையில் நகர சபையின் சபைக் கூட்ட அலுவல்களை கொண்டு நடாத்துதல் பற்றிய நியமத்துணைவிதிகள் 4(V)(அ) அமைவாக சபை கூட்டத்தை நடாத்துவதற்கான கூட்ட நடப்பெண் 06 ஆகும். அன்றைய கூட்ட அறிக்கையில் காலை 9.30 மணிக்கு கூட்டம் ஆரம்பமானதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும் உறுப்பினர் வரவுப் பதிவேட்டின் பிரகாரம் 9.30 மணிக்கு 05 உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ள நிலையிலும் 2025.07.09 ஆந் திகதிய சபைக் கூட்டமானது நியமத்துணை விதிகளின் பிரிவு 4(V)(அ) இற்கமைய கூட்ட நடப்பெண் இல்லாது சபைக் கூட்டங்களை கொண்டு நடாத்தியமை.

ii. 2025.07.09 ஆந் திகதிய சபைக்கூட்டம் 9.30 மணிக்கு ஆரம்பமானதாக கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட போதும் தவிசாளர் 9.38 மணிக்கு சமுகமளித்துள்ள போதும் 9.30 மணிக்கு சபை கூட்டம் யார் தலைமையில் ஆரம்பமானது என்பது தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்காத நிலையில் 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 24 இன் பிரகாரம் “கூட்டத்திற்கு தவிசாளர் வருகை தராத போது, நகர சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் உப தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர், உப தவிசாளர் ஆகிய இருவரும் வருகை தராதபோது சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் அவர்களுள் ஒருவரை கூட்டத்தில் தலைமை தாங்குதலுக்கு தெரிவு செய்து கூட்டத்தை நடாத்துதல் வேண்டும்" என குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும் குறித்த சபைக்கூட்டம் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இற்கு முரணாக நடாத்தப்பட்டுள்ளதுடன் அன்றைய கூட்ட அறிக்கையில் கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் என சபையின் தவிசாளர் கையொப்பமிட்டுள்ளமை.

மன்னார் நகர சபையின் 09.07.2025 ஆந் திகதிய கூட்டத்தின் ஒத்திவைக்கப்பட்ட 2025.07.17 ஆந் திகதிய கூட்டம்

iii. மன்னார் நகர சபையின் சபைக்கூட்ட அலுவல்களை கொண்டு நடாத்துதல் பற்றிய நியமத்துணைவிதிகள் 4(V)(அ) அமைவாக சபை கூட்டத்தை நடாத்துவதற்கான கூட்ட நடப்பெண் 06 ஆகவுள்ள நிலையிலும் கூட்ட அறிக்கையில் காலை 9.30 மணிக்கு கூட்டம் ஆரம்பமானதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும் உறுப்பினர் வரவுப் பதிவேட்டின் பிரகாரம் 9.30 மணிக்கு 04 உறுப்பினர்களே கையொப்பமிட்டுள்ள நிலையிலும் 2025.07.17ஆந் திகதிய சபைக் கூட்டமானது நியமத்துணை விதிகளின் பிரிவு 4(V)(அ) இற்கமைய கூட்ட நடப்பெண் இல்லாது சபைக் கூட்டங்களை கொண்டு நடாத்தியமை.

iv. 2025.07.17 ஆந் திகதிய சபைக் கூட்டம் 9.30 மணிக்கு ஆரம்பமானதாக கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட போதும் தவிசாளர் 9.43 மணிக்கு சமுகமளித்துள்ள போதும் 9.30 மணிக்கு சபை கூட்டம் யார் தலைமையில் ஆரம்பமானது என்பது தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்காத நிலையில் 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, நகர சபைகள் கட்டளைச் சட்டம் பிரிவு 24 இன் பிரகாரம் “கூட்டத்திற்கு தவிசாளர் வருகை தராத போது, நகர சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் உப தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர், உப தவிசாளர் ஆகிய இருவரும் வருகை தராதபோது சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் அவர்களுள் ஒருவரை கூட்டத்தில் தலைமை தாங்குதலுக்கு தெரிவு செய்து கூட்டத்தை நடாத்துதல் வேண்டும்" என குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும் குறித்த சபைக்கூட்டம் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இற்கு முரணாக நடாத்தப்பட்டுள்ளமை.

v. மன்னார் நகர சபையின் 2025.07.17 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் 9 தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. 09 தீர்மானங்களும் 08 உறுப்பினர்கள் ஆதரவளித்தமையினால் பெரும்பான்மை உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டது என கூட்டறிக்கையில் எழுதப்பட்டுள்ளது. குறித்த 09 தீர்மானங்களும் சபைக் கூட்ட அலுவல்களை கொண்டு நடாத்துதல் பற்றிய நியமத்துணை விதிகளின் பிரிவு 17 இல் ஒரு பிரேரணை ஒன்று

தீர்மானமாக நிறைவேற்றும் போது பின்பற்றப்பட வேண்டிய விடயங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 09 தீர்மானங்களும் நிறைவேற்றும்போது கீழ்வரும் விடயங்கள் பின்பற்றப்படாது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

a. பிரேரணைகளுக்கு சார்பாகவும் எதிராகவும் கருத்துக்களை முன்வைத்த உறுப்பினர்கள் யாரென்பது கூட்டக் குறிப்பில் எழுதப்பட்டிருக்கவில்லை.

b. பிரேரணைகள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

c. பிரேரணை வாக்கெடுப்பின் மூலமே நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்த உறுப்பினர் எண்ணிக்கையும் அவர்கள் யாவரென்பதும் கூட்டக்குறிப்பில் எழுதப்பட்டிருக்கவில்லை.

d. வாக்களிப்பதில் இருந்து விலகி நின்ற உறுப்பினர் எண்ணிக்கையும் அவர்கள் யாவரென்பதும் கூட்டக் குறிப்பில் எழுதப்பட்டிருக்கவில்லை.

e. மன்னார் நகர சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 16 ஆகும். கூட்டத்தில் சமுகமளித்த உறுப்பினர்கள் 16 பேர் ஆகும். மேற்படி 09 தீர்மானங்களும் 08 பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவினால் நிறைவேற்றப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. 08 பேர் ஆதரவு தெரிவித்ததால் சமமான வாக்குகளே கிடைக்கப்பெற்றுள்ளன. தவிசாளரின் மேலதிக அறுதியிடும் வாக்கு அளிக்கப்பட்டுள்ளதாக எதுவும் கூட்டக் குறிப்பில் எழுதப்பட்டிருக்காது குறித்த தீர்மானங்கள் எதவும் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவினால் நிறைவேற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளமை.

vi. மன்னார் நகர சபையின் 2025 .07.09ஆந் திகதிய சபைக் கூட்டத்தில் தவிசாளரின் அறிவித்தல்களை உறுப்பினர்கள் செவிமடுக்காது அல்லது ஏற்றுக்கொள்ளாது ஒரே நேரத்தில் கூடுதலான உறுப்பினர்கள் விவாதித்துக் கொண்டிருந்தமையினால் சபை நடவடிக்கைகளை சபை தவிசாளரினால் கொண்டு செல்ல முடியாத நிலையில் தவிசாளரினால் திகதி குறிப்பிடப்படாது குறித்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதுடன், ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் 17.07.2025 ஆந் திகதி நடைபெற்றபோது குறித்த சபைக் கூட்டத்தில் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு இடையில் வாக்குவாதங்களும் முறையற்ற சொற்பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டமையால் கூட்டத்தின் ஒழுக்கத்தை தவிசாளரினால் பாதுகாக்க முடியாமல் இருந்தமையும் அவ்விரு திகதிகளில் நடந்த சபைக் கூட்டங்கள், சபைக்கூட்ட அலுவல்களை கொண்டுநடாத்துதல் பறறிய நியமத்துணைவிதிகளின் பிரிவு 8, 21, 24 க்கு முரணாக நடாத்தப்பட்டுள்ளமை.

vii. சபைத் தவிசாளரினால் உறுப்பினரான திரு. ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் அவர்கள் தவிசாளரின் அறிவித்தலை உதாசீனம் செய்து சபை நடவடிக்கைகளுக்கு குழப்பம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு கூட்டத்தின் ஒழுக்கத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு கொண்டு இருப்பதனால் துணைவிதி 9(1) படி சபை மண்டபத்திலிருந்து உடனடியாக வெளியேறும் படி சபைத் தவிசாளரினால் உறுப்பினரான ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தும் உறுப்பினரான ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் அவர்கள் சபையிலிருந்து வெளியேறாது தொடர்ந்தும் சபையில் அமர்ந்திருந்தமை.

viii. சபைத் தவிசாளரினால் உறுப்பினரான திரு. சோமநாதன் பிரசாத் சோபநாதன் அவர்களை சபை நடவடிக்கைகளுக்கு குழப்பம் ஏற்படும் வகையில் செயற்படாது அமைதியாக இருக்கும்படி நியமத்துணைவிதியின் 8 ஆம் பிரிவிற்கமைய பணித்திருந்த போதும் அவ்வுறுப்பினர் தொடர்ந்தும் முரண்பாடான கருத்துக்களை பேசியமை.

மன்னார் நகர சபையின் 2025.07.25 ஆந் திகதி நடைபெற்ற விசேட கூட்டம்

ix. மன்னார் நகர சபையின் 2025.07.25 ஆந் திகதி நடைபெற்ற விசேட கூட்டத்திற்கான அறிவித்தல் நகர சபையின் சபைக் கூட்ட அலுவல்களை கொண்டு நடாத்துதல் பற்றிய நியமத் துணைவிதி 4(iii) அமைவாக போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

x. சபைக் கூட்ட அலுவல்களை கொண்டுநடாத்துதல் பற்றிய நியமத்துணைவிதிகளின் பிரிவு 4(vii) ஏற்பாடுகளில் கூட்டவரவு பதிவேட்டில் உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்த வரிசைக் கிரமத்தில் பெயர், வந்த நேரம் மற்றும் கையொப்பத்தை பதிதல் வேண்டும். அதற்கு முரணான வகையில் உறுப்பினர்கள் வருகை தந்த வரிசைக் கிரமத்தில் வரவுகள் பதியப்பட்டிருக்காமை.

xi. சபைக் கூட்டங்களில் வாக்குவாதங்கள் மற்றும் முறையற்ற, பண்பற்ற சொற்பிரயோகங்களை மேற்கொண்டமை.

xii. நியமத்துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய கூட்ட அறிக்கைகள் பதியப்படாமையும் கூட்ட நடவடிக்கைகளின் போது சபையின் செயலாளர் கூட்டத்திலிருந்து வெளியேறியமையும்.

மன்னார் நகர சபையின் கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட சபையின் அதிகார, நிர்வாக விடயப்பரப்பிற்குள் உள்ளடக்கப்படாத தீர்மானங்களும் சட்டவிதிகள், நிதிவிதிகளுக்கு முரணான தீர்மானங்களை நிறைவேற்றியமை.

xiii. நிதிவிதிகள் மற்றும் தாபன விதிக்கோவை ஏற்பாடுகளுக்கு முரணாக பெறுகைக்குழுவிற்கு கொடுப்பனவுகள் வழங்குவதற்கு MN/UC/2025/11/97 தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை. இதற்கு மேலதிகமான சபையின் செயலாளர் மற்றும் கணக்காளர் ஆகியோருக்கு விடுமுறை நாட் கொடுப்பனவு மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை.

xiv. MN/UC/2025/11/111 தீர்மானம் மூலம் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளரை சபையைக் குழப்பும் நடவடிக்கைகளை மேற்கொள்வதால் அவரை இடமாற்றம் செய்வது தொடர்பில் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு முறையீடு செய்வது தொடர்பான தீர்மானிக்கப்பட்டுள்ளமை.

xv. மன்னார் நகர சபைக்கு சொந்தமல்லாத மூர் மாட்டிறைச்சிக் கடைக்கு பகிரங்க கேள்வி கோரியமை.

II. மன்னார் நகர சபை தவிசாளர். மன்னார் நகர சபை செயலாளர் மற்றும் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கிடையிலான முரண்பாடுகள் தொடர்பான விடயங்கள்.

i. மன்னார் நகர சபை தவிசாளர் அலுவலக நேரத்தில் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளரை 2025.11.17ஆந் திகதி பி. ப. 3.52 மணியளவில் கையடக்க தொலைபேசி மூலம் பண்பற்ற வார்த்தைகளாலும் தகாத சொற்பிரயோகங்களாலும் பேசி முரண்பட்டமை.

ii. மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வை உத்தியோகத்தரும் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தருமான மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளரை பின்வரும் காரணங்களைக் குறிப்பிட்டு அவருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு மன்னார் நகர சபைத் தவிசாளரால் கோரப்பட்டமை.

a, பக்கச்சார்பாக செயற்படல்.

b. புதிய பாதீடு தயாரிக்க வேண்டும் என சில உறுப்பினர்கள் குறிப்பிட்டு சபை நடவடிக்கைகளை குழப்பும் வகையில் செற்படுவது தொடர்பில் உரிய தெளிவுபடுத்தலை வழங்காமை.

c. 2021-2022 காலப்பகுதியில் பண்டிகைக்கால கடைகளுக்கான இடங்கள் வழங்கியமை தொடர்பான விசாரணையை பக்கச் சார்பாக நடாத்துவதற்கு பின்னணியில் செயற்பட்டமை.

d. 2021 ஆம் ஆண்டில் சைனா பசார் கடைகள் பெறுகை நடைமுறைகள் இன்றி முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பாக உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காமை.

e. நகர சபையின் BS 56 ஆம் இலக்க கடையை 46/1980 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக உரிமை மாற்றம் செய்யுமாறு அறிவுறுத்தியமை.

f. மன்னார் நகர சபையின் நிர்வாகத்தை குழப்பும் விதமாக செயற்படுவதும் அவ்வாறு செயற்படுபவர்களுக்கு ஆதரவாக செயற்படுவதும்.

g. மாகாண உள்ளக கணக்காய்வு அவதானிப்புகள் 2023 அடிப்படையில் நேரடி மேற்பார்வை செய்யும் அலுவலகத்தின் மோசடிகளை தடுப்பதற்கு செயற்படாமை.

h. 2022 ஆம் ஆண்டில் புதிய பஸ் நிலைய விஸ்தரிப்பிற்காக பழைய வளிமண்டலவியல் திணைக்களத்தின் கட்டடங்களை இடித்தகற்றி மரத்தளபாடங்களை களவாடியமை தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை.

i. சபைக் கூட்ட நடவடிக்கை சட்ட ஏற்பாடுகளுக்கு முரணான நடைபெற்றதாக அறிக்கையிடுமாறு சபைச் செயலாளரை வற்புறுத்தியமை.

j. மன்னார் நகர சபைச் செயலாளர் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மேற்பார்வை உத்தியோகத்தர் என்ற பதவியைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் செயற்பாடுகளால் இடமாற்றம் வழங்குமாறு கோரியமை.

iii. மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் மன்னார் நகர சபை தவிசாளர் மற்றும் செயலாளரின் செயற்பாடுகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட விடயங்கள்.

a. மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக ஆய்வு உத்தியோகத்தர் பரிசோதனை செய்வதற்கு ஆவணங்களை பார்வையிடுவதற்கான சட்ட ஏற்பாடுகளை செயலாளர் தவிசாளருக்கு தெரியப்படுத்த தவறியமையும் ஆய்வு உத்தியோகத்தர் கடமையை நிறைவேற்ற விடாமையும்.

b. உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கடமையை நிறைவேற்றுவதற்கு தடை ஏற்படுத்தியமை.

c. நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டமை.

d. பெறுகை நடைமுறைகளுக்கு முரணான செய்யப்பட்ட வேலைகள் சபைக் கூட்ட நடவடிக்கைகள் நியமத்துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு முரணான மேற்கொள்ளப்பட்டமை. சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக சபைத் தீர்மானங்கள் தொடர்பாக அறிக்கையிட்டமை. மன்னார் நகர சபைத் தவிசாளரின் செய்பாடுகள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு பதிலைப் பெற்று அறிக்கையிட்டமை, மன்னார் கணக்காய்வு அத்தியட்சகர் அவர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட ஆவணம் மன்னார் நகர சபைத் தவிசாளரினால் கிழித்து அவருக்கே மீள அனுப்பி வைக்கப்பட்டமை தொடர்பாக அறிக்கையிட்டமை மற்றும் சபைச் செயலாளர் நகர சபையின் சட்ட முரணான செயற்பாடுகள் தொடர்பாக மேலதிகாரிகளுக்கு தெரியப்படுத்தாத சந்தர்ப்பத்திலும் செயலாளர் தனது கடமைகளை செய்யத் தவறிய சந்தர்ப்பத்திலும் அவற்றை சீர்செய்ய நடவடிக்கை எடுத்தமை போன்ற காரணங்களினால் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பக்கச் சார்பாகவும் சபை நிர்வாகத்தைக் குழப்பும் வகையிலும் செயற்பட்டதாக மன்னார் நகர சபைத் தவிசாளர் குறிப்பிட்டமை.

iv. மன்னார் நகர சபையின் 8 உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்ட மன்னார் நகர சபை தவிசாளரின் முறையற்ற நிர்வாக செயற்பாடுகள், அதிகார துஷ்பிரயோகம், அதிகாரத்தினைப் பயன்படுத்தி அலுவலக வளங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை.

v. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 181 ஆம் பிரிவிற்கு முரணான மன்னார் நகர சபை தவிசாளர் செயற்பட்டமை தொடர்பான 2025.11.03 ஆந் திகதிய NPLG/MN/A/UC/MN/AQ/2025/01 ஆம் இலக்க கணக்காய்வு விசாரணை.

**நாகலிங்கம் வேதநாயகன்,**
வடமாகாண ஆளுநர்.

ஆளுநர் செயலகம்,
பழைய பூங்கா,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

EOG 03 - 0020